

கன்னியாகுமரி மாவட்டத்தில், மேற்கொள்ளபட்டு வரும் நிவாரண பணிகள் குறித்து, இன்று (05.12.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சித்துறை, கூடுதல் முதன்மை அரசு செயலர் திரு. ஹான்ஸ் ராஜ்வர்மா இ.ஆ.ப., மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அரசுச்செயலர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., கண்காணிப்பு அலுவலர் திரு. டி.கே.இராமச்சந்திரன் இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு. டி. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. பிரகாஷ் இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் திரு. பாஸ்கரன் இ.ஆ.ப., ஆகியோர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள்.

செ.வெ.எண் : 909 நாள் : 05.12.2017

# கன்னியாகுமரி மாவட்டம்

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில் பயிர் சேதத்தை குறைத்திட விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலின் எதிரொலியாக 29.11.2017 நள்ளிரவு கடுமையான சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கண்டிராத கடும் சேதங்கள் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மீதான மீட்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (05.12.2017) ஊரக வளர்ச்சித்துறை அரசு செயலர் திரு.ஹான்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான கூட்டத்தில் மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., கண்காணிப்பு அலுவலர் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளர் திரு.டி.கே.இராமச்சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் மற்றும் தொழில் துறை ஆணையர் திரு.டி.இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., அவர்கள், வருவாய்த்துறை செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.பிரகாஷ் இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன் இ.ஆ.ப, அவர்கள், மீன்வளத்துறை இயக்குநர் திரு.தண்டபாணி இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், முதன்மை வன பாதுகாவலர் திரு. ஹைச். பசவராஜ் இ.வ.ப., அவர்கள் உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சேதமடைந்த பயிர்களான நெற்பயிர், தென்னை, வாழை, மரவள்ளிக்கிழங்கு, ரப்பர், கிராம்பு, நல்லமிளகு, பாக்குமரம் ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணியானது வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறையினைச் சார்ந்த அலுவலர்கள் கொண்டு வட்டார அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு, கணக்கெடுப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இது குறித்த சேத விபரங்கள் தினமும் மேற்படி குழுக்களிடமிருந்து பெறப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் ஒகி புயல் மற்றும் கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான நிவாரணம் வழங்கிட ஏதுவாக, பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் நில உடமை ஆவணங்களான பட்டா நகல் அல்லது நில தீர்வை ரசீது நகல், வங்கி புத்தக முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் தொலைபேசி/அலைபேசி எண் போன்ற விபரங்களை தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டார வேளாண்மை, தோட்டக்கலை அலுவலர்களை அணுகி வழங்கிட வேண்டும்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பு கும்பப்பூ பருவத்தில் 4,384 ஹெக்டேர் பரப்பளவில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஒகி புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்பால் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி பாதிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. மழைநீர் அதிகளவில் வயல்களில் தேக்கமடைந்தால் பயிர் வளர்ச்சி தடைபட வாய்ப்புள்ளது. இதனால் பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு அதிக வாய்ப்புள்ளது. எனவே தண்ணீர் தேங்கியுள்ள வயல்களில் பயிர் சேதத்தைக் குறைத்திட வடிகால் வசதியுள்ள வயல்களில் தேங்கியுள்ள தண்ணீரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தண்ணீர் வடிந்தவுடன் மேல் உரமாக ஏக்கருக்கு 26 கிலோ யூரியாவுடன் 21 கிலோ பொட்டாஷ் உரத்தையும் கலந்து வயலில் சீராக இட வேண்டும். 2 கிலோ யூரியாவுடன் ஒரு கிலோ ஜிங்க் சல்பேட்டை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் இலை வழி மூலம் தெளிக்க வேண்டும்.

வயல்களில் காணப்படும் வெற்றிடங்களை அதிக நாற்றுகள் உள்ள இடங்களில் இருந்து எடுத்து மறு நடவு செய்து பயிர் எண்ணிக்கையினை பராமரிக்க வேண்டும். தற்போது நிலவும் தட்பவெப்ப நிலையில் இலை சுருட்டுப் புழு, குருத்துப்பூச்சி, பச்சை தத்துப்பூச்சி மற்றும் இலை கருகல் நோய் தாக்குதல் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அனைத்து விவசாயிகளும் பயிர்நிலையினை கண்காணித்து வேளாண்மைத்துறை அலுவலர்களின் அறிவுரைகளை பெற்று தக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேவேளையில் விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்க வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது என வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.